**தலைப்பு 159 – சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 159 – சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 10 ஆந் திகதி அமைச்சின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினா், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

---

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

---

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 742.62 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 388.33 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 354.29 மில்லியன் அதாவது 47.71 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 118.29 | 115.00 | 3.29 | 2.78 |
| மூலதனம் | 624.33 | 273.33 | 351.00 | 56.22 |
| மொத்தம் | 742.62 | 388.33 | 354.29 | 47.71 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 15901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 3.00 | 2.98 | 0.30 | 1.66 | 8.00 | 6.62 |

## 2.3 கட்டுநிதி கணக்கு

அமைச்சின் கீழான 7002/0000/00/0457/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 1.78 மில்லியனாக ஆக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 03 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,560 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0002/0151/000 | 4,000 |
| 6000/0000/00/0013/0105/000 | 12,743 |
| 6000/0000/00/0016/0096/000 | 14,817 |
| மொத்தம் | 31,560 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் நிலையான சொத்துப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்**

2016 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட 28 பொருள் உருப்படிகளில் மிகையும் 1 உருப்படியில் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனைய நிறுவனங்களின் சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

ஏனைய 03 அமைச்சிற்குரிய பதிவு உரித்துள்ள 06 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது அமைச்சின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத 01 ஆண்டிற்கு குறைவான காலப்பகுதியிலிருந்து வரும் பொறுப்புக்கள் ரூபா 798,968 ஆக இருந்தது.

**3.3 செயலாற்றல்**

2016 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நீருடன் இணைந்த விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவது மற்றும் 7000 இருக்கைகளுடன் கூடிய கருத்தரங்கு மணிடமொன்றை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக 12 மாவட்டங்களில் சுற்றுலா கவர்ச்சியுள்ள இடங்களை அபிவிருத்தி செய்யும் 43 செயற்திட்டங்களுக்காக ரூபா 500 மில்லியனான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது எவ்வாறாயினும் அதில் 14 செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 275.83 மில்லியனில் ரூபா 196.15 மில்லியன் செயற்திட்டங்கள் பூரணப்படுத்தாமை போன்ற காரணங்களால் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 10,894,639 செலவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 04 செயற்திட்டங்களுக்குரிய கோவைகளில் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(i) தனியார் நிறுவனமொன்றுக்கு மாதாந்தம் செலுத்தப்பட வேண்டிய வலையமைப்புக் கட்டணங்கள், செலுத்த வேண்டிய தரப்பினர் தொடர்பாக, செயற்திட்ட ஆரம்பத்தின் போது திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டாமை காரணமாக ரூபா 1.08 மில்லியன் செலவிடப்பட்டு அல்ல நகரில் 04 இடங்களில் 2016 திசெம்பர் 30 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட CCTV கமரா முறைமை 2017 ஒக்தோபர் 10 ஆந் திகதி அளவில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) இதனால் கமரா முறைமைக்காக வழங்கப்பட்டிருந்த 02 வருட உத்தரவாத காலத்தில் பத்து மாதங்கள் முடிவடைந்திருந்ததுடன் கமரா முறைமையில் ஏற்படக் கூடியதாக இருந்த குறைபாட்டினை சரி செய்யக் கூடிய இயலுமை இல்லாதிருந்தது.

(இ) மதிரிகிரய வட்டதாக்க அருகில் தடாகம் மற்றும் சுற்றுப்புறத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 16.76 மில்லியன் தொகைக்கு தனியார் நிறுவனமொன்று வட மத்திய மாகாண பிரதம செயலாளருடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது. அவ் உடன்படிக்கை 2016 திசெம்பர் 28 ஆந் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் 02 மாதங்களுக்குள் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. உடன்படிக்கை செய்யப்பட்ட தினத்திலேயே மேற்குறித்த ஒப்பந்தகாரரின் ரூபா 5,786,000 பெறுமதியான ஐந்து பட்டியல்களின் பெறுமதியில் 80 சதவீதம் வேலைத்தள மூலப் பொருள் முற்பணமாக கோரப்பட்டிருந்தது. அம் முற்பணத் தொகையான ரூபா 4,628,800 க்கு பெறுமதி சேர் வரியாக ரூபா 694,320 சேர்க்கப்பட்டு மொத்த தொகையான ரூபா 5,323,120 தொகையில் ரூபா 3,992,340 தொகை (75 சதவீதம்) ஒப்பந்தகாரருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த கொடுப்பனவினை உறுதிப்படுத்துவதற்கு ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பின்வரும் பட்டியல்களை ஏற்றுக்கொள்ள முடியாததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(i) உடன்படிக்கை செய்யப்பட்ட திகதி மற்றும் அதற்கு முன்னைய நாட்கள் குறிப்பிடப்பட்டு பட்டியலில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை.

(ii) விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனமொன்றிடமிருந்து சூரிய சக்தி விளக்குகளுக்கான பட்டியல் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை.

(iii) 2016 திசெம்பர் 28 ஆம் திகதி தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 100,000 பிணைக்கப்பட்ட கற்கள், சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 3,500,000 தொகையான வழங்கல் பொழிப்பு பொருள் வழங்கலின் போது வழங்கப்பட்ட பட்டியலொன்றாக சமர்ப்பிக்கப்பட்டமை மற்றும் அந் நிறுவனம் அத்திகதியில் எந்தவொரு எந்தவொரு பிணைக்கப்பட்ட கற்களையும் வழங்கியிருக்கிவில்லை.

### 3.4 நட்டங்களும் சேதங்களும்

2016 ஆம் ஆண்டில் திடீர் விபத்திற்குட்பட்ட வாகனமொன்றில் வாகன காப்புறுதியிலிருந்து கிடைத்த தொகையை விட திருத்த செலவினம் கூடுதலாக இருந்தமையால் ரூபா 437,277 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 12 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 30 | 24 | 06 |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 13 | 06 |
| (v) | ஏனைய | 04 | 02 | 02 |
| | மொத்தம் | 71 | 53 | 18 |